(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 12.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2018 டிசம்பர் 19 புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2018, டிசம்பர் 21 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 3/ ’18

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— அரசியலமைப்பின் 48(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளல்,— 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி சனாதிபதி அவர்களால் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டதாலும்;

2018 நவம்பர் 14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் முதலாம் பந்தி நீக்கப்பட்டு 2018 நவம்பர் 16 ஆம் திகதி கௌரவ மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டதாலும்;

அதன்படி, 2018 நவம்பர் 14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் முதலாம் பந்தி நீக்கப்பட்டதாலும்;

2018 நவம்பர் 16 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது பொருண்மை ரீதியாக கௌரவ மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும் என்பதனாலும்;

அரசியலமைப்பின் 48 (2) ஆம் உறுப்புரைக்கமைய அமைச்சரவை கலைந்துள்ளதாலும்;

அதன்படி, அரசியலமைப்பின் 48 (2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதி அவர்களை, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்குமாறு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---